**நியதிகளும் நிபந்தனைகளும் - FriMi ஊடான Flexi வைப்புகள் மற்றும் நிலையான வைப்புகள்**

FriMi ஊடாக ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து Flexi வைப்பையும் மற்றும் நிலையான வைப்பயும் பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் நிர்வகிக்கும்.

**கீழே "ஏற்றுக்கொள்க" என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:**

**இந்நியதிகளும் நிபந்தனைகளும் Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு திதயாரிப்புதொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம் கட்டுப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:**

**Flexi வைப்பை ˙ அல்லது நிலையான வைப்பை ஆரம்பித்தல்**

1. Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு, உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் படிவத்தை உறுதிப்படுத்தல்களை நிறைவுசெய்வதை அ னு சரித்து வங்கியினால் செயற்படுத்தப்பட்டுள்ள FriMi சேமிப்பு கணக்கொன்றை கொண்டுள்ள வாடிக்கையாளர் மூலம் ஆரம்பிக்கப்படலாம்.

2. FriMi செயலி ஊடாக Flexiவைப்பை அல்லது நிலையான வைப்பை ஆரம்பிப்தற்கான கோரிக்கையொன்றை வாடிக்கையாளர் சமர்ப்ப க்கின்ற போது, வங்கிக்கு வாடிக்கையாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள மிகவும் அண்மைய உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் படிவத்தில் இருக்கும் விபரங்களை பயன்படுத்தி வாடிக்கையாளரின் பெயரில் Flexi வைப்பை அல்லது நிலையான வைப்பை ஆரம்பிப்பதற்கு வாடிக்கையாளர் சம்மதிப்பதுடன் மற்றும் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

3. Flexi வைப்பை அல்லது நிலையான வைப்பை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச வைப்புத்தொகை ரூ.50,000 ஆகும் என்பதுடன் உயர்ந்தபட்சத் தொகை எதுவும் காணப்படவில்லை (குறைந்தபட்ச வைப்புத் தொகை காலத்திற்கு காலம் வங்கி மூலம் திருத்தப்படலாம்).

4. Flexi வைப்பு ஆரம்பிக்கப்படக்கூடிய குறைந்தபட்சக் காலம் 30 நாட்களாகும் என்பதுடன் உயர்ந்தபட்சக் காலம் 365 நாட்களாகும் (வங்கியினால் வேறு வகையில் திருத்தப்பட்டாலன்றி).

5. நிலையான வைப்பு ஆரம்பிக்கப்படக்கூடிய குறைந்தபட்சக் காலம் 1 மாதமாகும் என்பதுடன் உயர்ந்தபட்சக் காலம் 60 மாதங்களாகும் (வங்கியினால் வேறு வகையில் திருத்தப்பட்டாலன்றி).

6. Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு தொடர்பில் வங்கியின் நியம நிலையான வைப்பு வட்டி வீதமும் அரசாங்க வரிகளும் ஏற்புடையதாகவிருக்கும். நிலவுகின்ற வட்டி வீதங்கள் பற்றி FriMi செயலியில் ஆலோசனை வழங்கப்படும்.

7. Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு ஆரம்பிக்கும் நாணயம் இலங்கை ரூபாவாக மட்டுப்படுத்தப்படடிருக்கும்

8. Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு தனிப்பட்ட கணக்குகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்

**Flexi வைப்பு அல்லது நிலையான வைப்புத் தொழிற்பாடுகள்**

9. டிஜிடல் ரீதியாக கணக்கு ஆரம்பிக்கும் படிவத்தை நிறைவுசெய்வதன் மூலம் Flexi வைப்பை அல்லது நிலையான வைப்பை ஆரம்பிப்பதற்கான கோரிக்கையை வாடிக்கையாளர் சமர்ப்பித்த பின்னர், தேவையான நிதியங்கள் (கிடைக்கப்பெறுமாயின்) தெரிவுசெய்யப்பட்ட மூலக் கணக்கிலிருந்து தன்னிச்சயாக கழிக்கப்படுவதுடன் மற்றும் Flexi வைப்பிற்கு அல்லது நிலையான வைப்பிற்கு தன்னியக்கமாக மாற்றல்செய்யப்படும்.

10. Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு உருவாக்கப்பட்டவுடன் FriMi செயலி வாயிலாக் வாடிக்கையாளர் வைப்பு உறுதிப்படுத்தல் அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொள்வார்.

11. Flexi வைப்புக்கு அல்லது நிலையான வைப்புக்கு மாற்றல்செய்வதற்கு தெரிவுசெய்யப்ட்ட மூலக் கணக்கு போதிய நிதியங்களைக் கொண்டிருக்காவிடின் , Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு ஆரம்பிக்கப்படாது.

12. Flexi வைப்பின் அல்லது நிலையான வைப்பின் முதிர்வுக்குப் பின்னர் Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு மீது வட்டி எதுவும் ஒன்றுசேராது.

13. Flexi வைப்பின் அல்லது நிலையான வைப்பின் மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் தெரிவுசெய்யப்பட்ட மூலக் கணக்கிற்கு மாத்திரம் மாற்றல்செய்யப்படக் கூடியதாகவிருக்கும்

**Flexi வைப்பை அல்லது நிலையான வைப்பை முடிவுறுத்தல்**

14. Flexi வைப்பின் அல்லது நிலையான வைப்பின் முதிர்ச்சியில் மற்றும் Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு முதிர்ச்சிக்கு முன்னரே மீளப்பெறப்படுகின்ற சந்தர்ப்பத்தில், Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு உருவாக்கப்பட்ட நேரத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூல கணக்கிற்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படும்.

15. வைப்புத் திகதியிலிருந்து 30 நாட்களுக்கு முன்னர் Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு முதிர்ச்சிக்கு முன்னர் முடிவுறுத்தப்படுமாயின் (வைப்புத் திகதி உள்ளடங்கலாக ஆனால் முடிவுறுத்தல் திகதி நீங்கலாக) வாடிக்கையாளருக்கு வட்டி எதுவும் செலுத்தப்படாது.

16. 15 ஆம் வாசகத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்னர் எந்நேரத்திலும் Flexi வைப்பு அல்லது நிலையான வைப்பு முதிர்ச்சிக்கு முன்னர் முடிவுறுத்தப்படுமாயின் செலுத்தத்க்க வட்டியானது இணங்கியதை விடக் குறைவான வீதத்திலும் வங்கியின் விருப்புரிமையிலும் கணிக்கப்படும்.

**இதர தகவல்கள்**

17. இதிற் குறிப்பிடப்பட்டவைக்கு முரணாக எதுஎவ்வாறிருப்பினும், வங்கியானது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளை வாடிக்கையாளரின் Flexi வைப்புடன் அல்லது நிலையான வைப்புடன் ஒன்றுசேர்த்து அத்தகைய பொறுப்புகள் உண்மையாயினும் சரி அல்லது எதிர்பாராதவையாயினும் சரி, முதன்மையானதும்சரி அல்லது பிணைய உறுதி உடையதாயினும்சரி அத்துடன் பலதாக அல்லது ஒருமித்ததாக இருப்பதாயினும் சரி ஏதேனும் வேறு கணக்கு மீது அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து கடனாகச்செலுத்த வேண்டிய வேறு தொகைக்கு/தொகைகளுக்கு Flexi வைப்பை அல்லது நிலையான வைப்பை கணக்கின் வரவிற்கான ஏதேனும் தொகையினை/நிலுவையினை

எதிரீடுசெய்வதற்கு அல்லது மாற்றல்செய்வதற்கு வாடிக்கையாளர் சம்மதமளித்து அதிகாரமளிக்கின்றார்.

18. வங்கி, எந்நேரத்திலும் இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு தானாக உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

19. இந்நியதிகளும் நிபந்தகைளும் சட்டத்தினால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்துகின்ற விடத்து தன்னியக்கமாக மாறுபவையாக இருக்கும்.

20. இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (“பிரதான ஒப்பந்தம்”) கொண்டிருக்கும் அதே பொருளை கொண்டிருக்கும்.

21. இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்தம் மற்றும் வங்கியின் பொதுவான தொழில் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் எற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் (இவற்றின் பிரதிகள் கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றன). அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி என்பதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் அனைத்து அத்தகைய நியதிகளாலும் நிபந்தனைகளாலும் பிணிக்கப்படுவார்.

வரைவிலக்கணங்கள்

**“வங்கி”** என்பது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி (PQ 118) என்பது பொருளாகும்.

“Flexi வைப்பு” FriMi வாயிலாக என்பது 30 நாட்கள் தொடக்கம் 365 நாட்கள் வரையான வீச்சுடைய குறித்த காலப்பகுதியொன்றுக்காக வைப்பிடப்படும் தவணை வைப்புக் கணக்கொன்று என்பது பொருளாகும்.

“ நிலையான வைப்பு” என்பது FriMi அல்லது வங்கி ஊடாக குறித்த காலப்பகுதியொன்றுக்காக வைப்பிடப்படும் தவணை வைப்புக் கணக்கொன்று என்பது பொருளாகும்.

“KYC” என்பது உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் என்பது பொருளாகும்.

“மூல கணக்கு” FriMi மீதான கொடுப்பனவு சாதனமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சியில் பேணப்படுகின்ற ஒரு கணக்கு என்பது பொருளாகும்.